தமிழ் நாடு சட்டமன்றப் பேரவை.

வெள்ளிக்கிழமை, 1977, ஜூலை 29.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. முனு ஆதி [redacted] அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

1, வினாக்கள்—விடைகள்.

உடுக்குறியிட்ட வினாக்கள்.

குடியரசுத் தலைவர் ஆட்சியின்போது கலைக்கப்பட்ட ஊராட்சி மன்றங்கள்.

*4—வினா: திரு. என். கிட்டப்பா:
திரு. து. புருஷோத்தமன் } மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா ?

(அ) தமிழ் நாட்டில் குடியரசுத் தலைவர் ஆட்சி அமுல் படுத்தப்பட்ட பிறகு 1977 மார்ச் 15-ம் நாள் முடிய தமிழ் நாட்டில் எத்தனை ஊராட்சி மன்றங்கள் கலைக்கப்பட்டன ?

(ஆ) அவ்வாறு ஊராட்சி மன்றங்களைக் கலைத்ததற்கான பொதுவான காரணங்கள் யாவை ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: (அ) 21 (இருபத்தொன்று)

(ஆ) (1) 1958-ம் வருட தமிழ் நாடு பஞ்சாயத்து சட்டப்படி மாதம் ஒருமுறை பஞ்சாயத்துக் கூட்டம் நடத்த வேண்டும். அவ்வாறு கூட்டங்கள் ஒழுங்காக நடத்தப்படாவிட்டால் பஞ்சாயத்து நிர்வாகம் சரிவர நடக்க வாய்ப்பில்லை. தொடர்ந்தாற்போல் ஓராண்டுக்குமேல் கூட்டம் நடத்தாதிருத்தால் பஞ்சாயத்தைக் கலைப்பதற்கு முக்கியமான ஒரு காரணமாகும்.

மற்ற காரணங்கள் பின்வருமாறு :—

(2) ஐந்தாண்டுக்கு ஒருமுறை வீட்டு வரி நிர்ணயம் செய்யத் தவறுதல் ;

(3) மன்றத்தின் ஆண்டு வரவு-செலவு பட்டியல் தயாரிக்கத் தவறுதல் ;

(4) சச்சரவுகள் காரணமாகச் செயல்படத் தவறுதல்:

(5) சட்டப்படி கூட்டு சேர்க்க வேண்டிய பெண் உறுப்பினரைக் கூட்டு சேர்க்கத் தவறுதல் ;

(6) ஊராட்சிக்குச் சொந்தமானநிலங்களை அனுமதியில்லாமல் ஒப்படைத்தல் ;

(7) அனுமதியில்லாமல் எழுத்தரை நியமித்தல் ;

(8) பதவிப் பிரமாணம் எடுத்துக் கொள்ளத் தவறுதல்;

(9) பாதுகாக்கப்பட்ட குடிதண்ணீர் வழங்க நடவடிக்கை எடுக்கத் தவறுதல் ;

(10) மன்றத் தலைவருக்கும் உறுப்பினர்களுக்குமிடையே ஒத்துழைப்பின்மையினால் நிர்வாகத்தில் ஆர்வமில்லாதிருத்தல்.

திரு. என். கிட்டப்பா : தலைவர் அவர்களே, இப்படி இனியும் எத்தனை ஊராட்சி மன்றங்கள் கலைப்பதற்கு ஷோ காஸ் நோட்டீஸ் கொடுக்கப்பட்டிருக்கின்றன ?

இதுபோல கலைக்கப்பட்டது தவறு என்று எத்தனை ஊராட்சி மன்றங்கள் உயர்நீதி மன்றத்திற்குப் போய் இருக்கின்றன ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: கலைக்கப்பட்ட முல்லைப்பாடி கொடுங்கையூர் ஆல்வார்ப்பட்டி ஊராட்சி மன்றங்கள் மட்டும் தலைமை நீதிமன்றத்தில் ரிட் மனுக்கள் தாக்கல் செய்திருக்கின்றன.

திரு. என். கிட்டப்பா : ஊராட்சி மன்றங்களில் தலைவர்கள் இல்லாத காரணத்தினால் வேலைகள் நடைபெறவில்லை. தலைவர் இல்லாத ஊராட்சி மன்றங்களுக்காவது தலைவர் தேர்தலை நடத்த ஏற்பாடு செய்யப்படுமா ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : அதுபற்றி ஏற்கனவே இந்த மன்றத்தில் அறிவிக்கப்பட்டிருக்கிறது.

திரு. க. சுப்பு : தலைவர் அவர்களே, குடியரசுத் தலைவர் ஆட்சியின்போது பல ஊராட்சி மன்றத் தலைவர்கள் மிசா கைதிகளாகச் செய்யப்பட்டு, உள்ளே வைக்கப்பட்டிருக்கிறார்கள். கூட்டங்களுக்கு வர அவர்களுக்கு நோட்டீஸ் அனுப்பப்படவில்லை. 3 கூட்டங்களுக்குமேல் வரவில்லை என்று அப்படிப்பட்ட தலைவர்கள் பதவி இழந்துவிட்ட நிலைமை இருக்கிறது. இந்தத் தவறை நிவர்த்தி செய்ய உள்ளாட்சித்துறை எடுத்த நடவடிக்கைகள் என்ன ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : அவர்கள் வெளியே வந்த பிறகு பதவிகளை ஏற்பதற்குரிய ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY LIBRARY 23-5-1978

[1977 ஜூலை 29]

திரு. க. சுப்பு: வெளியே வந்து, நாடாளுமன்றத் தேர்தல் நடைபெற்றுவிட்டது. சட்ட மன்றத் தேர்தல் நடைபெற்று விட்டது. மந்திரி சபையும் அமைந்து ரொம்பநாளாகிவிட்டது. இதுபோன்று தவருக நடந்து கொண்ட அதிகாரிகள் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது ?

மாண்புமிகு திரு. கா காளிமுத்து: வெளியே வந்தபிறகு துணைத்தலைவர்களிடம் இருந்த பொறுப்பை தலைவர்களிடம் ஒப்படைக்க ஆணையிடப்பட்டிருக்கிறது.

திரு. இரா. இராசமாணிக்கம்: ஊராட்சித் தலைவர்கள், ஊராட்சி ஒன்றியப் பெருந்தலைவர்கள் மீசாக் கைதிகளாக சிறையில் வைக்கப்பட்டு, பரோல் கேட்டும் கொடுக்காமல், தொடர்ந்து மன்றக் கூட்டம் மூன்றுக்கு வரவில்லை என்று பதவி நீக்கம் செய்யப்பட்டது சரிதானு என்பதை அறிய விரும்புகிறேன். அமைச்சர் அவர்கள் அதற்குப் பதிலளிப்பாரா ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: உறுப்பினர் திரு. சுப்பு கேட்ட அதே கேள்வியைத்தான் கேட்கிருர்கள். வெளியே வந்த பிறகு வேறு எந்தவிதமான குற்றமும் இல்லையென்ருல், அவர்கள் ஊராட்சித் தலைவர் பொறுப்பை ஏற்பதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன.

திரு. வி. கே. கோதண்டராமன்: இப்போது அமைச்சர் அவர்கள் சொன்ன காரணத்திற்காகக் கலைக்கப்பட்டது என்று சொன்னுல் 90 சதவீதம் பஞ்சாயத்துக்களைக் கலைக்க வேண்டியிருக்கும். ஆனுல் உண்மையில் இருபது அம்சத் திட்டத்தை எதிர்த்தார்கள் என்ற காரணத்திற்காக வேண்டி, எமர்ஜென்சியை எதிர்த்தார்கள் என்ற காரணத்திற்காக வேண்டி, அதை மனதில் உள்ளூர வைத்துக் கொண்டு இதுபோன்ற சில காரணங்களைக்காட்டி கலைத்திருக்கிருர்கள் என்பதை அமைச்சர் அவர்கள் உணருகிருர்களா ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: குடியரசுத் தலைவர் ஆட்சி அமுல்படுத்தப்படுவதற்கு முன்னுலேயே ஊராட்சி மன்றங்கள் இத்தகைய காரணங்களுக்காகக் கலைக்கப்பட்டிருக்கின்றன. இதில் வேறு எந்தவிதமான உள்நோக்கமும் இல்லை. தவறுகள் செய்துள்ள ஊராட்சி மன்றங்கள் கலைக்கப்பட்டிருக்கின்றன. மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களும், ஊரக வளர்ச்சி இயக்குநர் அவர்களும் பரிசீலித்த பிறகுதான் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கிறது.

திரு. கே. கந்தசாமி: மதுரை மாநகராட்சி ஆயுட்காலம் முடிந்த பிறகும் அதிக நாட்கள் நீடிக்கப்பட்டது. ஆனுல் திடீரென்று கலைக்கப்பட்டது. உடனே தேர்தலும் நடத்தப்படவில்லை. அதற்கு ஏதாவது விசேஷ காரணங்கள் உண்டா?

[1977 ஜூலை 29

மாண்புமிகு திரு. க. காளிமுத்து: தனிக் கேள்வி போடவும்.

திரு. க. அன்பழகன்: ஊராட்சி மன்றங்கள் நல்லமுறையில் இயங்குவதற்கும் பயன்படுவதற்கும் ஊராட்சி ஒன்றியங்கள் பெருமளவில் துணை நிற்கின்றன என்பது நாம் அறிந்த உண்மையாகும். ஊராட்சி ஒன்றியங்கள் பலவிடங்களில் கலைக்கப்பட்டதன் விளைவாக ஊராட்சி மன்றங்கள் நல்ல முறையில் செயல் படவில்லை என்பது அரசுக்குத் தெரியுமா? ஊராட்சி ஒன்றியங்கள் கூட கலைக்கப்பட்டது. அரசியல் நோக்கத்தால் கலைக்கப்பட்ட ஒன்றியங்கள் பல இருப்பதால் ஊராட்சி மன்றங்கள் இயங்குவதற்கு எந்த வகையில் உடனடியாக அரசு வழி செய்யவிருக்கிறது?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: 12,000-க்கு மேற்பட்ட ஊராட்சி மன்றங்கள் இருக்கின்றன. ஆனால் கலைக்கப்பட்டவை 21–க்கு உள்ளேதான். அரசாங்க அதிகாரிகள், ஊரக வளர்ச்சித் துறை அதிகாரிகள் அந்தப் பொறுப்பை ஏற்றுச் செயல்பட்டு வருகிறார்கள்.

திரு. என். வரதராஜன்: அமைச்சர் அவர்கள் ஊராட்சி ஒன்றியங்கள் கலைக்கப்பட்டதற்கான காரணங்களை எடுத்துச் சொல்லி யிருக்கிறார்கள். பொதுவாக அவை விருப்பு வெறுப்பு காரணமாகக் கலைக்கப்பட்டிருக்கின்றன என்ற அபிப்பிராயம் அதிகமாக இருக்கிறது. ஆகவே வருகிற காலங்களில் இப்படிப் பட்ட கலைப்பைத் தடுக்கும் முறையில், அப்படிக் கலைப்பு ஏற்பட்டாலும் அதுபற்றிய அபிப்பிராயத்தைச் சொல்லும்படியான கருத்தை ஏற்கும் முறையில் சட்டத்தில் திருத்தம் செய்ய அரசாங்கம் முயற்சிக்குமா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: விருப்பு வெறுப்பு அடிப்படையில் அல்ல. அந்தந்த மாவட்ட ஆட்சித் தலைவர்கள் சொல்லக் கூடிய காரணங்களையும் ஊரக வளர்ச்சித் துறை இயக்குநர் அவர்கள் சொல்லக் கூடிய காரணங்களையும் வைத்து அவற்றின் அடிப்படையில் பரிசீலித்து முடிவு எடுக்கப்படுகிறது. சில ஊராட்சி மன்றங்கள் மீது அத்தகைய குற்றச்சாட்டுக்கள் வந்தபோது அதற்கான காரணங்கள் குறித்து விளக்கம் கேட்கப் பட்டிருக்கிறது. அந்த விளக்கம் சரியாக இருந்தால் கலைப்பு தடுத்து நிறுத்தப்பட்டிருக்கிறது.

டாக்டர் கே. சமரசம்: ஊராட்சி மன்றங்கள், ஊராட்சி ஒன்றியங்கள், கார்ப்பரேஷன் போன்றவை கலைக்கப்பட்டதற்கான காரணங்கள் சொல்லப்பட்டது. மதுரை மாநகராட்சியைக் கலைத்தது எந்த விதிகளின்கீழ் எந்தச் சட்டத்தின்கீழ், கலைக்கப் பட்டது?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இது, ஊராட்சி மன்றங்கள் கலைக்கப்பட்டது பற்றிய கேள்வி.

1977 ஜூலை 29]

திரு. செ. இராமலிங்கம் : ஊராட்சி மன்றத் தலைவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டதற்குப் பின்னால் முன்னாள் தலைவர்கள் முறையாக அவர்கள் வகித்து வந்த பொறுப்புக்களை, பஞ்சாயத்து உடைமைகளைத் தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவர்களிடம் இது வரையில் ஒப்படைக்காமல் முன்னாள் தலைவர்களே அந்தப் பொறுப் புக்களை வைத்துக் கொண்டிருக்கிறார்கள். பலவிடங்களில் அப்படிப் பட்ட நிலைமை இருக்கிறது. அது குறித்து வழக்கு மன்றத்திற்குச் சென்ற பின்னால் முன்னாள் தலைவர்கள் புதிய தலைவர்களிடம் பொறுப்புக்களை ஒப்படைக்க வேண்டும் என்று சொல்லி ரூ. 25 அபராதமும் விதிக்கப்பட்டிருக்கிறது. அப்படி அபராதம் விதிக்கப் பட்ட பின்னாலும் முன்னாள் தலைவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவர்களிடம் பொறுப்புக்களை ஒப்படைக்கவில்லை. மறுபடியும் வழக்குமன்றத்திற்குச் சென்று மறுபடியும் ரூ. 25 அபராதம் விதிக்கப்பட்டது. பின்னரும் தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவர் களிடம் பொறுப்புக்கள் ஒப்படைக்கவில்லை. ஏன் அப்படி பொறுப்புக்கள் ஒப்படைக்கப்படவில்லை என்று கேட்டால் உள் ளாட்சித் துறையில் அதற்கான சரியான சட்டம் இல்லை என்று கூறுகிறார்கள். ஆகவே இதுபற்றி சட்டத்தில் சரியான திருத்தங் கள் கொண்டுவர அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : இது கேள்வி நேரம். கவன ஈர்ப்புத் தீர்மானம் ஒன்று கொடுத்தால் அதுபற்றி பதில் அளிக்கப்படும்.

திரு. எஸ். ஆர். இராதா : ஊராட்சி மன்றங்கள் கலைப்பு பற்றி இங்கே அறிவிக்கப்பட்டது. தற்போது பல ஊராட்சி மன்றங்களின் தலைவர்கள் கூட்டங்களை நடத்தாமல் இருப்ப தோடு அங்கு செய்ய வேண்டிய அடிப்படை வசதிகள், விளக்கு வசதி, ரோடு வசதி போன்றவைகள் செய்ய முடியாமல் பல ஊராட்சி மன்றங்கள் இருக்கின்றன. அதுபற்றி பலவிடங்களில் பொது மக்களிடமிருந்து புகார்கள் அனுப்பப்பட்டிருக்கின்றன. அந்தப் புகார்களை உடனடியாக எடுத்துக் கொண்டு அந்த ஊராட்சி மன்றங்களைக் கலைப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படுமா?

(முற்பகல் 9-10)

மாண்புமிகு திரு கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, அது பற்றிய புகார்கள் வருமானால் அதைப்பற்றி பரிசீலித்து உண்மையிலேயே அவைகளில் தவறுகள் நடந்திருக்குமானால் நட வடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ஏ. ஆர். மாரிமுத்து : தலைவர் அவர்களே, ஊராட்சி ஒன்றியங்கள் கலைக்கப்பட்டதின் காரணமாக கௌன்சில்கள் கலைக்கப்பட்டிருக்கின்றன. எந்தெந்த ஊராட்சி மன்றங்களை கலைத்தார்களோ அந்த மன்றங்களிலுள்ள குறைகளைப் போக்கு வதற்கு நடவடிக்கை எடுப்பதற்காக ஊராட்சித் தலைவர்களைப் போட்டு ஒரு ஸ்பெஷல் அட்வைசரி கமிட்டி ஏற்படுத்த அரசு பரிசீலனை செய்யுமா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: ஏற்கெனவே இது பற்றி பேசப்பட்டது. இதுபற்றி எந்தவித முடிவும் எடுக்கப்படவில்லை.

திரு சோ. பாலகிருஷ்ணன் : இப்படிப்பட்ட அட்வைசரி கமிட்டி போடாவிட்டாலும் கூட, டி.டி.ஓ.-க்களை வைத்து, பஞ்சாயத்துத் தலைவர்களை எல்லாம் சேர்த்து மாதாமாதம் கூட்டம் போடுவதற்கு ஏற்பாடு செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன யோசனை பற்றியும் கவனிக்கப்படும்.

திரு. கூத்தகுடி ச. சண்முகம்: தலைவர் அவர்களே, ஒழுங்கீனமாக நடந்து கொண்டதற்காக ஊராட்சிகள்மீது நடவடிக்கை எடுக்கப்பட்டது. அரசியல் காரணங்களுக்காகக் கலைக்கப்பட்டது என்று கூறி இப்போது ஏதாவது பரிசீலனைக்கு வருமானால் அதைப் பரிசீலனை செய்ய அரசு உத்தரவிடுமா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : அதற்காக அரசு உத்தரவிடாது.

திரு. இரா. இராசமாணிக்கம்: மிசாவில் பஞ்சாயத்துத் தலைவர்கள் கைது செய்யப்பட்ட போது துணைத் தலைவர்களிடம் பொறுப்பு ஒப்படைக்கப்பட்டது என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். மிசாவிலிருந்து விடுதலை செய்யப்பட்டு வந்த பின்னால், ஒப்படைக்கப்பட்ட பொறுப்புகளை சில துணைத் தலைவர்கள் தலைவர்களிடம் கொடுக்க மறுக்கிறார்கள். ஆகவே இப்படிப்பட்ட துணைத் தலைவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. கா காளிமுத்து : தலைவர் அவர்களே, எந்த ஊராட்சியில் இப்படி நடந்திருக்கிறது என்ற தகவலைத் தந்தால் அதைப்பற்றி யோசித்து நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. எம். ஏ. லத்தீப் : ஊராட்சி மன்றங்கள் குடியரசுத் தலைவர் ஆட்சிக்காலத்தில் கலைக்கப்பட்டது எத்தனை எண்ணிக்கை என்பதை அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். இவ்விதம் கலைக்கப்படுவதற்கு முன்னால் அந்தந்த ஊராட்சி மன்றத் தலைவருக்கு நோட்டீஸ் அனுப்பப்பட்டதா ? அதற்கு எத்தனை ஊராட்சி மன்றங்கள் பதில் அனுப்பியது ? பதில் கொடுக்காத ஊராட்சி மன்றங்கள் எத்தனை ? இதன் காரணமாக வழக்குமன்றத்திற்கு எத்தனை ஊராட்சி மன்றங்கள் சென்றுள்ளன?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, விளக்கம் கேட்டு பதில் அளிக்காத காரணத்திற்காக 21 மன்றங்கள் கலைக்கப்பட்டன. 81 மன்றங்கள் பதில் அளித்தன. இரண்டு ஊராட்சி மன்றங்களின் வழக்குகள் வழக்குமன்றத்தில் உள்ளன. நான்கு மன்றங்களைக் கலைப்பதற்கு அறிவிக்கப்பட்டிருக்கிறது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS